O.S. No.15/2024

22.01.2025

**வா.சா.1**

**திரு ரவிசங்கர்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

நான் திருவாரூரில் பல ஆண்டு காலமாக பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரி. நான் முறைப்படி அரசு அனுமதி பெற்று பைனான்ஸ் செய்து வருகிறேன். அதற்கான லைசென்ஸை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். 30.05.2023 அன்று பாண்டியராஜன் என்பவருக்கு கடனாக கொடுக்கப்பட்டதற்கு வருமான வரி தாக்கல் செய்துள்ளேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். பாண்டியராஜனும் என்னைப்போல் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார். பின்னர் அரசியல்வாதியாக மாறிவிட்டார். பாண்டியராஜனுக்கு பணம் தேவைப்பட்டால் என்னிடம் அடிக்கடி பணம் வாங்கி வருவது வழக்கம். சுமார் 15 ஆண்டு காலமாக என்னிடம் பணம் வாங்கி வருகிறார், நானும் அவரிடம் வாங்குவேன். என்னிடம் பாண்டியராஜன் தொகை

பெறும்போது பத்திரத்தில் அடமானம் செய்து கொடுத்ததை 2020 ஆம் ஆண்டு கொடுத்திருந்த ஆவணத்தை 2022 ஆம் ஆண்டு ரத்து செய்து கணக்கை முடித்து சென்றார். கூடுதலாக பிரதிவாதியிடமிருந்து பூர்த்தி செய்யப்படாத வெற்று ஆவணத்தில் கையொப்பம் வாங்கி வைத்திருந்தேனா என்றால் இல்லை. 2017 ஆம் ஆண்டு ரூ.15,00,000/-ம், 2019 ஆம் ஆண்டு ரூ.20,00,000/-ம் ஆக கூடுதல் ரூ.35,00,000/- என்னிடம் கடனாக பெற்று அதை திரும்ப செலுத்தி விட்டார் என்றால் சரிதான். மேற்படி கால கட்டத்தில் பாண்டியராஜன் என்னிடம் பிராமிஸரி நோட்டு மற்றும் காசோலைகளை என்னிடம் கொடுத்திருந்தார் எனவும் அதை பயன்படுத்தி தற்போது தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளேன் எனவும் சொன்னால் தவறு. பிரதிவாதி கடன் தொகையை என்னிடம் திரும்ப செலுத்தும்போது வங்கி மூலமாகவும் நேரடியாகவும் செலுத்தியுள்ளார் என்றால் ஆம். 2022 ஆம் ஆண்டிற்கு பிறகு பிரதிவாதி வங்கி மூலமாக எந்த பண பரிவர்த்தனையும் செய்யவில்லை. 2022 க்கு பிறகு பல தொகைகளை வங்கி மூலமாகவும் நேரடியாகவும் என்னிடம் தொகை கொடுத்து பிரதிவாதி கடனை அடைத்து விட்டார் என்றால் தவறு. பிரதிவாதி கடன் வாங்கும்போது என்னிடம் கொடுத்த பூர்த்தி செய்யப்படாத ஆவணங்களை கடன் தீர்த்த பிறகு அவரிடம் கொடுக்கவில்லை என்பதற்காக பிரிதிவாதி

திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்திருந்தார் என்றால் சரி. பிரதிவாதி கொடுத்த புகாரின் பேரில் என்னை காவல் துறையினர் நீதிமன்றம் வழியாக பரிகாரம் தேடிக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்கள். 30.05.2023 அன்று பிரதிவாதி என்னிடம் எந்த தொகையும் கடனாக பெறவில்லை எனவும் 2017, 2019 ஆண்டுகளில் பிரதிவாதி கடன் பெற்றபோது கொடுத்த பூர்த்தி செய்யப்படாத ஆவணங்களை தற்சமயம் இந்த வழக்கிற்காக பூர்த்தி செய்து பயன்படுத்தி கொண்டேன் என்றால் தவறு. பிரதிவாதி கொடுத்த பூர்த்தி செய்யப்படாத ஆவணங்களை பயன்படுத்தி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் எனவும் நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத் தக்கதல்ல எனவும் சொன்னால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.01.22 16:00:02 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.